OS: 656/2018

Date: 13.07.2022

பெயர் : சண்முகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 2, 5 முதல் 7ம் பிரதிவாதிகள் தரப்பில்**

நான் எவ்வளவு விஸ்திரண சொத்திற்கு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் விஸ்திரணம் என்னால் சரியாக சொல்ல தெரியவில்லை. மொத்தம் எத்தனை சர்வே எண்களில் பாகம் கேட்டுள்ளேன் என்றால் கந்தசாமி பெயரில் உள்ள சர்வே எண்கள் 6, கோவிந்தன் பெயரில் உள்ள சர்வே எண்கள் 8, வீரமுத்து பெயரில் உள்ள சர்வே எண்கள் 6 ஒட்டுமொத்த சொத்துக்களுக்கும் கேட்டுள்ளேன். சர்வே எண்களை குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும், பட்டா எண்.7ல் ச.எண்.35/18AE. 35/18AL, பட்டா எண்.163ல் ச.எண்.35/4, 37/10, பட்டா எண்.27ல் ச.எண்.35/18J, 18L ஆகியவை எனக்கு நினைவில் உள்ளது. நான் இவ்வழக்கில் 4 பட்டா ஆவணங்களாக போட்டுள்ளேன். அதில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு கேட்டுள்ளேன். பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பாத்தியப்பட்ட சொத்தில்தான் நான் பாகம் கேட்டுள்ளேன். குழந்தை என்பவர் எனது தாத்தாவின் அப்பா. தாவா சொத்துக்கள் ஆதியில் குழந்தை என்பவருக்கு பாத்தியப்பட்டதுதான். குழந்தை இறந்து எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 60 ஆண்டுகள் இருக்கும். மேற்படி குழந்தையின் மனைவி இறந்துவிட்டார். குழந்தைக்கு 2 மகன்கள், சின்னபையன், முருகன் ஆகியோர்கள் ஆவார்கள். மற்றொருவர் இறந்துவிட்டார். சின்னபையன், முருகனின் உடன்பிறந்த சகோதரரிகள் 6 நபர்கள் ஆவார். மேற்படி 6 சகோதரிகளும் காலமாகிவிட்டார்கள். 6 சகோதரிகளின் கணவன், அவர்களது மகன், மகள்கள் வாரிசுகளாக இருக்கிறார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி 6 சகோதரிகளின் வாரிசுகளை விசாரித்து தெரிந்து இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு திருமணத்தின்போதே உரிய சீர்வரிசைகள் செய்ததாக சொன்னார்கள், அதனால் நான் கட்சி சேர்க்கவில்லை. மேற்படி சகோதரிகளுக்கு சீதனம் எப்போது, எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் அது எனது தந்தை சொல்லிதான் எனக்கு தெரியும், நான் அப்போது பிறக்கவில்லை.

நான் மேற்படி 6 சகோதரிகளுக்கு திருமணத்திற்கு செய்த சீர்வரிசைகள் குறித்து என் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனது தந்தை எவ்வளவு சீதனம் அவரது சகோதரரிகளுக்கு செய்தார் என சொன்னாரா என்றால் அந்த காலத்தில் என்ன முறைப்படியோ செய்தார். என்தந்தையின் சகோதரிகளுக்கு உரிய சீதனம் எதுவுமே செய்யாமல் செய்ததாக சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எனது தந்தையின் 6 சகோதரிகளின் வாரிசுகளை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த தாவாவானது அவசிய தரப்பினர் கட்சி சேர்க்கவில்லை என்ற அடிப்படையில் இநத் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீரமுத்து எனது தந்தையின் மூத்த சகோதரர். மேற்படி வீரமுத்து காலமாகிவிட்டதால் அவரத வாரிசுகளாக 8 முதல் 12 பிரதிவாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கோவிந்தன் என்பவர் சின்னபையன் சகோதரர் முருகனுக்கு பிறந்த மகன் ஆவார். கோவிந்தனுடன் உடன் பிறந்தவர்கள் சின்னம்மாள், குழந்தையம்மாள், பெருமாயி என்றால் சரிதான். மேற்படி சின்னம்மாள், குழந்தையம்மாளும் இறந்துவிட்டார்கள், பெருமாயி மட்டும் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். இறந்த சின்னம்மாளுக்கு மாரியப்பன், கனகரத்தினம் என்ற 2 மகன்கள் உள்ளார்கள். அதில் கனகரத்தினம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னம்மாளின் கணவர் கந்தனும் இறந்துவிட்டார். மேற்படி சின்னம்மாளின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், பெண் வாரிசுகளுக்கு சீர் செய்துவிட்டதால் சேர்க்கப்படவில்லை. சீர் எந்த ஆண்டு செய்யப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. சீரே செய்யாமல் இருந்தோம் என்றால் சரியல்ல, மேற்படி வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. குழந்தையம்மாள் இறந்துவிட்டார், அவருக்கு வாரிசாக கோவிந்தம்மாள், பழனிசாமி, சண்முகம் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. உயிருடன் உள்ள பெருமாயியையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான் அவர்களுக்கு சீர் செய்யப்பட்டது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.